**கேகாலை நகர சபை**
**கேகாலை மாவட்டம்**

-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 26 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 16 ஆந் திகதியன்று நகர சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கேகாலை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2014 ஆம் ஆண்டின்போது பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்ட பிட்டிஹுமவத்த காணியிலிருந்து கிடைக்கப்பெற்ற 10 சதவீதக் காணியாகிய 67.5 பர்ச்சஸ் காணியினது ரூபா 15,153,307 பெறுமதியானது காணி மற்றும் கட்டிடப் பெறுமதியில் உள்ளடக்கப்படாததால் நிலையான சொத்துக்களது பெறுமதி அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருவாயைக் கணிப்பிடுகையில் 2014 ஏப்ரல், மே, யூலை, ஆகஸ்ட் மாதங்களுக்கெனப் பெறப்பட்ட ரூபா 4,031,822 சேர்ந்து நின்ற அடிப்படையில் கணக்கிலிடப்படவில்லை.

(இ) 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளுக்கெனப் பெற வேண்டிய ரூபா 49,885 நீதி மன்றக் கட்டணத்திற்குக் கடன்பட்டோரின் கீழ் நிதியேற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளுக்கெனப் பெறப்பட்ட நீதிமன்றத் தண்டப் பணமாகிய ரூபா 29,250 மீளாய்வாண்டிற்கான வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(உ) வருவாய் விடயங்களுக்கும் செலவின விடயங்களுக்கும் பேரேட்டுக் கணக்குகள் பேணப்படவில்லை.

(ஊ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினக் கடன் கொடுத்தோர் ரூபா 48,670,520 ஆகக் காட்டப்பட்டிருந்தபோதும், கொடுப்பனவு ஆவணங்களின் பிரகாரம் கடன்கொடுத்தோர் தொகை ரூபா 652,490 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(எ) ரங்வல விவசாயிகள் நிறுவனத்தின் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 380,845 ஆகும். எனினும், அது ரூபா 340,845 ஆகக் கணக்கில் காட்டப்பட்டமையால் கடன் கொடுத்தோர் தொகை ரூபா 40,000 குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் 05 கணக்கீட்டு விடயங்களினது மீதி ரூபா 21,608,932 கூட்டுத்தொகை ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் ஆக கணக்குகளது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 20,028,334 ஆகியமையால் ரூபா 1,580,598 வித்தியாசம் நிலவியது.

(ஆ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு முடிவில் ரூபா 19,517,509 ஆகக் காட்டப்பட்ட பொது வைப்புக் கணக்கானது அநேக ஆண்டுகளாகக் கணக்கிணக்கஞ் செய்யப்படாதிருந்தது. இதன் காரணமாக, பொது வைப்புப் பதிவேட்டுடன் கணக்கு மீதியைக் கணக்கிணக்கஞ் செய்ய முடியாது போனது.

**1.3.3 தொங்கற் கணக்கு**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த தொங்கற் கணக்கினது செலவு மீதி ரூபா 3,657 ஆகும்.

**1.3.4 பெற வேண்டிய கணக்குகள்**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டைக் கடந்திருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 8,448,456 ஆகும்.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நி.பி 396(ஈ) | ஆறு மாதங்களுக்குள் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 32,746 பெறுமதியான 16 காசோலைகள் வருவாயில் செலவு வைக்கப்படவில்லை. |

(ஆ) இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவை

| | |
|---|---|
| XXIV அத்தியாயத்தின் 1.6 ஆம் பந்தி | இடமாற்றம் பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதியாகிய ரூபா 113,148 இடமாற்றம் பெற்றுச் சென்ற 2011 செப்டம்பர் தொடக்கம் அறவீடு செய்யப்படாததுடன் இவ்வுத்தியோகத்தர் பணியாற்றும் நிறுவனத்தினது தகவல்களையேனும் அறிந்து கொள்வதற்கு இது வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 53,037,862 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 38,556,845 ஆகியமையால் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறுகளில் ரூபா 14,481,017 அதிகரிப்பு தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான 04 வருவாய் விடயங்களினது அதிகரிப்பும் 5 செலவின விடயங்களினது குறைவும் நிதிப் பெறுபேறுகளின் அதிகரிப்புக்குப் பிரதான காரணிகளாக அமைந்தன.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| வருவாயினது தோற்றுவாய் | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை | 2015.01.31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| தீர்வையும் வரியும் | 5,093 | 2,276 | 8,120 | 6,553 | 2,817 | 1,567 | 4,384 |
| குத்தகை வாடகை | 3,415 | 5,991 | 39,444 | 38,191 | (2,597) | 1,253 | (1,323) |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 185 | 122 | 2,019 | 1,878 | 63 | 141 | 204 |
| பிற வருவாய் | 40,772 | 40,461 | 97,001 | 70,117 | 311 | 26,884 | 27,195 |

### 2.3.2 குத்தகை வாடகை

வருடாந்தக் குத்தகை அடிப்படையில் சபையின் சொத்துக்களைக் குத்தகைக்கு வழங்கியிருந்த 08 குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 16,750 குத்தகை நிலுவையானது 1 – 5 ஆண்டுகளாக அறவிடப்படாதிருந்தது.

### 2.3.3 விளம்பரப் பலகைக் கட்டண நிலுவை

தூண்களில் தொங்கவிடப்பட்டு உள்ள விளம்பரப் பலகைக் கட்டணமாக 2014, 2015 ஆம் ஆண்டுகளுக்கென ரூபா 43,890 தனிப்பட்ட கம்பனியினூடாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 தீர்வை வரி

(i) அறவிடப்படாதுள்ள 10 ஆண்டுகளைக் கடந்த ரூபா 479,321 வரியை அறவிடுவதற்குச் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ii) வருடாந்தத் தீர்வை வரியை அறவிடுவதற்கு 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அறவீடுகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், 2001 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படியே வரி அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.5 தொலைபேசித் தொடர்புக் கோபுரக் கட்டணம்

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தொலைபேசித் தொடர்புக் கோபுரங்களை நிர்மாணித்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 06 தொலைபேசித் தொடர்பு நிறுவனங்களிலிருந்த வியாபார வரியாக ரூபா 18,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.6 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டின்போது செயற்பட்டவாறிருந்த 11 வர்த்தக நிறுவனங்களிலிருந்து ரூபா 11,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.7 காணிகளைக் கூறுபடுத்தி விற்பனை செய்தல்

2005 யூன் 01 ஆந் திகதிய 2005/04 ஆம் இலக்க சபரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையின் iii, iv, v ஆம் பந்திகளின் பிரகாரம் காணிக் கூறுகளது தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் 1 சதவீத வைப்புப் பணத்தைப் பெறுவதற்கும், அதன் பின்னர் விற்பனை செய்யப்படும் காணிக் கூறுகளது விற்பனை விலை, உரித்துறுதி இலக்கம் போன்ற விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையுடன் விற்பனை செய்யப்பட்ட காணியின் பெறுமதிக்குரிய 1 சதவீத வரியை காணிக்கூறு விற்பனை செய்யப்படும் தறுவாயிலேயே விற்பனையாளரால் சபைக்குச் செலுத்தப்படும் எனும் நிபந்தனையை உள்ளடக்கிய உடன்படிக்கையில் ஈடுபடுவதுடன் 1 சதவீத வரி 14 நாட்களுக்குள் அறவிடப்படுவதற்கும் அவ்வரியைச் செலுத்தாது போயின் நீதிமன்றத்திற்கு அது அறிவிக்கப்பட்டு அறவீட்டை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின்போது பிடிஹூமவத்தை எனும் பெயருடைய காணி கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டபோது காணிக் கூறுகளது உரித்துறுதி பரிசீலிக்கப்பட்டு விற்பனை விலைக்கேற்ப 1 சதவீதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.8 சட்டத்தரணியின் அலுவலகம் தொடர்பான வரி அறவிடப்படாமை

நகரசபைகள் அதிகாரச் சட்டத்தின் 165(அ) மற்றும் (ஆ) என்பவற்றில் குறிப்பிடப்பட்டவாறு நகர சபையின் எல்லைக்குள் நடைபெறும் வேலை அல்லது தொழிலுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டுமாயினும், கேகாலை நகர எல்லைக்குள் உள்ள நகர சபை சட்டத்தரணிகள் அலுவலகக் கூட்டுத்தொகுதியில் உள்ள 22 சட்டத்தரணிகளது அலுவலகங்கள் மற்றும் நகரிலுள்ள ஏனைய சட்டத்தரணிகளது அலுவலகங்கள் என்பவற்றிலிருந்து வரியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.9 சட்டத்தரணிகளது அலுவலகக் கூட்டுத்தொகுதிக்கான வாடகை அறவிடப்படாமை

கேகாலை நகர சபை சட்டத்தரணிகளது அலுவலகக் கூட்டுத் தொகுதியில் ரூபா 1,000 மாதாந்த வாடகை அடிப்படையில் நடைபெறும் 20 ஆம் இலக்க அறையின் ரூபா 35,000 வாடகை நிலுவையும் ரூபா 52,500 தண்டப்பணமும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.10 விளம்பரப் பலகைகள்

(i) நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 34 நிலையான விளம்பரப் பலகைகளுக்கு 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 675,582 அறவிடப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது 37 விளம்பரப் பலகைகளுக்கான கட்டணம் அறவிடப்படாமையால் சபை ரூபா 372,400 இழப்பிற்குள்ளானமை தெரியவந்தது.

(ii) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள டிஜிடல் பெயர்ப் பலகைகளுக்கான கட்டணத்தை அறவிடுவதற்கு உப விதிகள் தயாரிக்கப்படாததுடன், கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைக்கமைய சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 100 டிஜிடல் விளம்பரப் பலகைகளுக்கும் அதிகமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. அவற்றிற்குக் கட்டணம் அறவிடப்படவில்லை.

### 2.3.11 நகர சபைக்குரிய சொத்துக்களைக் குத்தகைக்கு வழங்குதல்

கேகாலை நகர சபைக்குச் சொந்தமான காணிகள் தற்காலிகப் பயிர்ச் செய்கைக்கென வருடாந்தக் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வழங்கப்பட்டிருந்தன. காணிகள் வழங்கப்படும்போது சபை பயன்படுத்தும் குத்தகை உடன்படிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்படும் காணியில் குத்தகையாளர் நிரந்தரக் கட்டிடத்தை அமைப்பதும் நிரந்தர பயிர்ச் செய்கையை மேற்கொள்வதும் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் அந் நிபந்தனையை மீறிக் குத்தகையாளர் செயற்படுமிடத்து குத்தகை முடிவுக்க் காலத்தின்போது தெனை அக்கட்டிடம் அல்லது நிரந்தரப் பயிர்ச் செய்கை இழப்பீடு வழங்கப்படாது நகர சபையின் பயனுள்ள பணிகளுக்குப் பயன்படுத்தப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அக்கட்டிடம் அல்லது பயிர்ச் செய்கை நகர சபையால் பயனுள்ளவாறு பயன்படுத்தப்படாதவிடத்து வருடாந்தக் குத்தகை உடன்படிக்கைப் படி அதனைக் குத்தகைக்கு வழங்கலாம். சபையின் 51 காணிக் கூறுகளைக் குத்தகைக்குப் பெற்ற குத்தகையாளர்கள் நிரந்தரக் கட்டிடங்களை நிர்மாணித்திருந்தபோதும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் அதனைச் சபைக்கு அறிவித்திருக்கவில்லை. அந்த 51 காணிக் கூறுகளிலும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டமை சம்பந்தமாக குத்தகை உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததுடன், காணிகளது கூறுகளை மீண்டும் மதிப்பீடு செய்து வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 யூலை 20 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை 02/2011 (திருத்தம்) மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களால் ஆட்சேர்க்கப்படும் நாட் சம்பளம் பெறும் சமயாசமய, தற்காலிக, பிரதியீட்டு ஊயழிர்கள் அனைவரும் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்குப் பங்களிக்குமாறு நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், 2014 ஆம் ஆண்டின்போது ஆட்சேர்க்கப்பட்ட 28 ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தில் பங்களிப்புச் செய்வதற்கு இடமளிக்கப்பட்டதன் மூலம் 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 67,865 பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற/ இடமாற்றம் பெற்ற 04 ஊழியர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியில் பேணப்படும் ரூபா 10,080 பெறுமதியான ஊழியர் பிணை வைப்புப் பணம் விடுவிக்கப்படாதிருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபரகமுவ மாகாண சபையின் தலைமைச் செயலாளரால் வழங்கப்பட்ட 14 வாகனங்கள், உள்ளூராட்சி அமைச்சினது செயலாளரால் வழங்கப்பட்ட 1 வாகனம் மற்றும் பொது நிர்வாக அமைச்சினால் வழங்கப்பட்ட 1 வாகனம் என 16 வாாகனங்களது உரித்தைச் சுவீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை நகர சபை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2016 பெப்ரவரி 16 ஆந் திகதியன்று சபைக் களஞ்சியத்திற்குப் பொறுப்பாகவுள்ள முகாமைத்துவ உதவியாளருடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்ட களஞ்சியப் பரிசோதனையின்போது ரூபா 396,861 பெறுமதியான மூவகைப் பொருட்களது குறைவு அவதானிக்கப்பட்டது.

(இ) வேலைகளை மேற்கொள்ளும் தொழிலாளர்கள் மற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் என முறையே 19 மற்றும் 07 வெற்றிடங்கள் நிலவியமையால் சுகாதார மற்றும் சுகநல வசதிகளை வழங்குவதானது குறைந்த மட்டத்திலேயே இருந்தது. வீதிப் பராமரிப்புத் தொழிலாளர்கள் போதியளவு ஆட்சேர்க்கப்படாமையால் வீதிகளைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளும் பராமரிப்பு நடவடிக்கைகளும் முறையாக நடைபெறவில்லை. சபையின் வீதிகளைச் சுத்தப்படுத்துதல், வடிகால்களைச் சுத்தப்படுத்துதல், குப்பை கூளங்களை அகற்றுதல், கழிவறைகளைச் சுத்தப்படுத்துதல், கொம்போஸ்ட் செயற்திட்ட நடவடிக்கைகள் என்பன முறைப்படி நடவாதிருந்தமை கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின்போது புலனாகின.

(ஈ) போதியளவு சுகாதாரத் தொழிலாளர்கள் இல்லாததால் மருத்துவ மனைச் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள வெலிமன்னாதொட கழிவறை மூடப்பட்டிருந்தது. புதிய பொருளாதார நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பெண்களுக்கும் ஆண்களுக்குமான கழிவறைகள் பொதுப் பாவனைக்கு வழங்கப்படாது வர்த்தகர்களின் பயன்பாட்டிற்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தன. (வர்த்தகர்களிடம் சாவிகள் ஒப்படைக்கப்பட்டுப் பாவனையின் பின்னர் பூட்டு போடப்பட்டிருந்தன). சபைக்குச் சொந்தமான ஏனைய 05 கழிவறைகளையும் சுத்தப்படுத்துவதற்கு ஒரேயொரு சுகாதாரத் தொழிலாளி மாத்திரமே பணியிலமர்த்தப்பட்டிருந்ததால் அவை குறைந்தளவு சுத்தத்துடனேயே காணப்பட்டன.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் ஆயுர்வேத மருத்துவர்களுக்குத் தொலைபேசிப் படியாக 2015 சனவரி தொடக்கம் மாதாந்தம் ரூபா 2,500 சம்பளத்துடன் வழங்கப்பட்டிருக்கையில் ரூபா 3,505 க்குப் பட்டியலிடப்பட்ட தொகை மீளளிப்புச் செய்யப்பட்டுமிருந்தது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

2016 பெப்ரவரி 29 ஆந் திகதியன்று முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட தார்க் கலவையைப் பயன்படுத்திப் பழுதுபார்க்கப்பட்ட கேகாலை தடாக வீதியின் மூன்றாம் ஒழுங்கைக்குரிய வேலையை 2016 மார்ச் 01 ஆந் திகதியன்று சபையின் வேலை அத்தியட்சகருடன் களப்பரிசோதனைக்குட்படுத்தியபோது வீதியின் மேற்பரப்பில் பழுதடைந்திருந்த பகுதிகளைச் சுத்தப்படுத்தாதும் அவ்விடங்களில் சூடுபடுத்திய தாரைப் பூசாமலும் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டிருந்த கலவை போடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட கலவையைப் போட்டதன் பின்னர் அதனை வீதி உருளை மூலம் இறுக்கமடையச் செய்திருக்கவுமில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) கையிருப்புக் கட்டுப்பாடு
(ஊ) கடன்பட்டோர் கட்டுப்பாடு